# அறிவித்தல்

## அரச சேவை ஆணைக்குழு

## சுங்க அத்தியட்சகர் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்

2018.04.05 ஆம் திகதியிலிருந்து 2018.12.10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெற்றிடமாகக் காணப்பட்ட 31 சுங்க அத்தியட்சகர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில், பிரதிச் சுங்க அத்தியட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆட்சேர்ப்பு முறை

அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றதொரு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், குறித்த அறிவித்தலில் விபரிக்கப்படுகின்ற தகைமைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றியுள்ள வேட்பாளர்களிலிருந்து, காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமையவும் மூப்புரிமையின் அடிப்படையிலும், மேற்படி ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

**02.** தேவையான தகைமைகள்

2.1 தொழில்வாண்மைத் தகைமைகள்

i. பிரதிச் சுங்க அத்தியட்சகர் பதவியில் நிரந்தர நியமனமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பப்படிவ முடிவுத்திகதிக்கு உடனடியாக முன்சென்ற ஐந்து (05) வருட காலப்பகுதியில் ஒரு செயலூக்கத்துடனான திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், எந்வொரு வடிவிலான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படாதிருத்தலும் வேண்டும்.

iii. விண்ணப்பப்படிவ முடிவுத்திகதிக்கு உடனடியாக முன்சென்ற குறித்த ஐந்து (05) வருட காலப்பகுதியில், அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு இணங்க, சராசரியான அல்லது அதற்கும் கூடிய செயலாற்றுகை மட்டமொன்றை தமது சேவையில் காண்பித்திருத்தல் வேண்டும்.

குறிப்பு

இருப்பினும், மேலே பந்தி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள தேவையான எண்ணிக்கையிலான அலுவலர்கள் இல்லாமையினை கருத்திற்கொண்டு சுங்க அத்தியட்சகர் பதவியில் வெற்றிடமொன்று காணப்படும் பொழுது, சுங்க உதவி அத்தியட்சகர் பதவியின் தரம்-I மற்றும் தரம்-II ஆகிய பதவிகளில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மிகவும் சிரேஷ்ட அலுவலர்கள், ஏனைய முன்-நிபந்தனைகளை நிறைவுசெய்வதன் பேரில், சுங்க அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகைமையினைப் பெறுகின்றார்.

**03.** இப் பதவிக்கு ஏற்புடைய மாதாந்த சம்பளம் பின்வருமாறு:-

ரூபா 47,615 ï 10X 1335-8 X 1630-17X2, 170 ï Rs.110, 895 /- (25.02.2016 ஆம் திகதிய 3/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் SL 1 - 2016)

05. வேட்பாளர்களின் ஆளடையாளம்

i. உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பங்களை அனுப்பியுள்ள வேட்பாளர்கள் மாத்திரம் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

ii. வேட்பாளரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு

06. விண்ணப்பங்கள்

I. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2019.03.04 ஆம் திகதிக்கு முன்னா் கிடைக்கும் வகையில் சுங்கப் பணிப்பாளா் நாயகத்திற்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னா் பெறப்படுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பத்தின் ஒரு மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. வேட்பாளர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை ஏ4 அளவுக் கடதாசியில் தயார்செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் அவர்கள் தற்போது சேவையாற்றுகின்ற திணைக்களப் பணிப்பாளர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

IV. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படக்கூடும். விண்ணப்பப்படிவ இழப்புகள் மற்றும் தாமதங்கள் போன்ற அஞ்சல் தொடர்பிலான முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

V. உங்களால் அனுப்பிவைக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவமானது பொய்யான அல்லது பிழையான தகவல்கள் எதனையும் கொண்டிருப்பதாகக் கண்டறியப்படுமிடத்து, உங்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படும்.

VI. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் எந்தவொரு முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரச சேவை ஆணைக்குழுவின் ஆணையின் படி

செயலாளர்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 01

2019.02.18